

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | ஆகஸ்டு 04, 2022 | புரட்சி 21 | முழக்கம் 29 | விலை: ரூ.3.00

## ஒன்றிய அமைச்சர் தேர்வு செய்த ஊடக அதிபர்களின் இரகசிய சந்திப்பு

தமிழ்நாட்டில், பாஜகவின் அதிகாரப்பூர்வ நாளேடாக வெளிவந்து கொண்டிருப்பது தினமலர் நாளேடு. அந்த நாளேடு 30.07.2022 அன்று ஒரு செய்தியை வெளியிட்டது. தமிழ்நாடு வந்த பிரதமர் மோடியை பாரதிய ஜனதா கட்சியின் தலைவர்கள், ஆளுநர் மாளிகையில் சந்தித்துப் பேசி இருக்கிறார்கள். அப்போது மோடி, தமிழ்நாடு பாஜகவினரிடம் ஒரு கருத்தை எச்சரிக்கையாக கூறி இருக்கிறார்; ‘திராவிட முன்னேற்றக் கழகம், பாஜகவிற்கு சிந்தாந்த ரீதியாக எதிரான ஒரு கட்சி. அதே நேரத்தில் திமுகவை பாஜக எதிர்க்கின்றபோது, பாஜக தமிழ் மொழிக்கோ, தமிழ் கலாச்சாரத்திற்கோ எதிரான கட்சி என்று மக்கள் புரிந்து கொள்ளாமல் நடந்து கொள்ள வேண்டும்’ என்று அவர் எச்சரிக்கை செய்ததாக அந்த செய்தி கூறுகிறது.

மோடி தமிழ்நாட்டிற்கு வரும்போதெல்லாம், திருக்குறளின் பெருமையையும், தமிழின் பெருமையையும் ஏன் பேசி வருகிறார்? அதன் பின்னால் உள்ள உள்நோக்கம் என்ன என்பது இதன் மூலம் தெளிவாக தெரிகிறது. தமிழ்நாட்டில் பாஜக காலூன்ற வேண்டுமானால், தமிழின் பெருமையையும், திருக்குறளின் பெருமையையும் பேசியாக வேண்டும். அதற்காகத்தான் அவர்கள் இதை பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தான் மோடியின் கருத்து பிரதிபலிப்பதாக இருக்கிறது.

தினமலர் நாளேடு பாஜகவின் செல்வாக்குமிக்க நாளேடு. தமிழ்நாட்டில் நடைபெறும் ‘செஸ் ஒலிம்பியாட்’ போட்டியின் தொடக்க விழாவில் பங்கேற்க வந்த மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர், அனுராக் சிங் தாக்கூர், தினமலர் நிர்வாகி ஆ.ஆதிமூலம் வீட்டிற்கு சென்றிருக்கிறார். அங்கே ஊடகத் துறையைச் சேர்ந்த, குறிப்பிடத்தக்க சிலரை மட்டும் அவர் சந்தித்து பேசியிருப்பதாக செய்திகள் வந்திருக்கின்றன. குறிப்பாக ‘இந்து குழுமம், புதிய தலைமுறை, ராஜ், பாலிமர், நியூஸ் 7, இந்தியன் எக்ஸ்பிரஸ், ஆனந்த விகடன்’ ஆகிய ஊடகங்களின் அதிபர்களை மட்டும் மத்திய அமைச்சர், தினமலர் நிர்வாகி ஆ.ஆதிமூலம் வீட்டில் சந்தித்து பேசியிருக்கிறார்.

ஊடக சந்திப்பு என்றால், அதில் அனைத்து ஊடகங்களும் பங்கேற்பதாக இருக்க வேண்டும். ஆனால், தேர்வு செய்யப்பட்ட சில ஊடகங்களை மட்டும் அமைச்சர் ஏன் சந்தித்திருக்கிறார் என்பதை சந்தித்த ஊடகத்துறையினர் தான் மக்களுக்கு வெளிச்சப்படுத்த வேண்டும். அத்தகைய செல்வாக்கு மிக்க தினமலர் நாளேடு தான் மோடியினுடைய இந்தக் கருத்தையும் வெளியிட்டிருக்கிறது.

## ‘இந்து’ பெண்களை சங்கிகள் புண்படுத்தலாமா?

இந்துக்களின் மனதை புண்படுத்துகிறார்கள் என்ற கூக்குரல், தொடர்ச்சியாக கேட்டுக் கொண்டே இருக்கிறது. புராணங்களில் இருப்பதை, உள்ளதை உள்ளபடி எடுத்துப் பேசினாலே, இந்துக்கள் மனதை புண்படுத்துகிறது என்று சங்கிகளும், பாஜகவினரும் கூறி வருகின்றனர். அப்படியானால் அவர்கள் அந்த புராணத்தை தான் தடை செய்ய வேண்டும் என்று கூற வேண்டுமே தவிர, புராணத்தில் இருப்பதை எடுத்துக் கூறுவது எப்படி புண்படுத்துவதாகும் ?

ஆக்ராவில் நடந்த ஒரு சம்பவத்தை சுட்டிக் காட்ட விரும்புகிறோம். ‘கீதாஞ்சலி ஸ்ரீ ’ என்ற பெண்மணி ‘ரெத் சமாதி’ என்ற இந்தி நாவலை எழுதி இருக்கிறார். அந்த நாவலுக்கு சர்வதேச புகழ் வாய்ந்த ‘புக்கர் பரிசு’ கிடைத்திருக்கிறது. இப்படி ஒரு நாவலுக்கு பரிசு கிடைப்பதை அந்த மாநிலம் பாராட்ட வேண்டும். ஆக்ராவில் கீதாஞ்சலியை பாராட்டுகிற நிகழ்ச்சிக்கு ரங்கீலா என்ற அமைப்பு ஏற்பாடு செய்தது. அந்த நாவலில் வருகிற சில பகுதிகள் இந்துக்களின் மனதை புண்படுத்துகிறது என்று அந்தப் பகுதியில் குடியிருக்கும் ஒருவர் காவல்துறையில் புகாரளிக்க அந்தப் புகாரை உத்திரப் பிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத்திற்கும் டுவிட் செய்ய உடனடியாக காவல்துறை அந்த நிகழ்விற்கு அனுமதி மறுத்துவிட்டது.

காரணம், சிவன் குறித்தும் பார்வதி குறித்தும் அதில் கூறப்பட்ட கருத்துகள், இந்துக்கள் மனதைப் புண்படுத்துகிறது என்பது தான். இதற்கு ரங்கீலா என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் சரியான விளக்கம் ஒன்றைத் தந்திருக்கிறார்கள்.

புராணங்களில் இருக்கிறது என்று கூறினாலே புண்படுத்துகிறது என்று எப்படி கூறுகிறீர்கள் ? அப்படிப் புண்படுத்துகிறது என்று சொன்னால், அந்தப் புராணங்களைத் தடை செய்யக் கோரி நீங்கள் நீதிமன்றத்திற்குப் போக வேண்டும். அதை எடுத்துக் கூறுவது எப்படி புண்படுத்துவது ஆகும்? என்ற கேள்வியை எழுப்பியிருக் கிறார்கள். விஷ்ணு புராணம், லிங்க புராணம், சிவ புராணம் என்று பல்வேறு புராணங்கள் கற்பனைகளைப் பேசிக் கொண்டிருக்கின்றன. கடவுள்களின் பிறப்புகளைக் கூறிக் கொண்டிருக்கின்றன. இவைகளில் இருப்பதை எடுத்துக் காட்டினாலே இந்துக்களின் மனது புண்படுகிறது என்று புலம்பத் துவங்கி விடுகிறார்கள்.

‘பூக்கர் பரிசு’ என்ற மிக உயரிய பரிசு பெற்ற ஒரு நாவலுக்கு, மனதைப் புண்படுத்துகிறது என்ற காரணம் காட்டி அந்த நிகழ்ச்சிக்கு தடை போடுவது என்பது சர்வதேச உலகம் இந்தியாவை எவ்வளவு கேவலமாக பார்க்கும்.

புண்படுத்துகிறது என்று கூறுபவர்களைப் பார்த்து ஒரு கேள்வி. சமூகத்தில் சரிபாதியாக இருக்கிறவர்கள் பெண்கள். ஆனால் பெண்களை இந்து மத சடங்கிலிருந்து, இந்து புரோகிதர் வேலை பார்ப்பதிலிருந்து முற்றாக ஒதுக்கி வைத்திருக்கிறீர்களே இது இந்து பெண்களை அவமதிப்பது ஆகாதா ? புண்படுத்துவதாகாதா ? இன்றைக்கும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் சுவயம் சேவக்குகளாக பெண்கள் இருக்கக் கூடாது என்று தடை இருக்கிறதே இது இந்துப் பெண்களுக்கு ஏற்படுத்தியிருக்கிற மிகப் பெரிய அவமானம் அல்லவா?

### நாடாளுமன்ற நிலைக் குழு அம்பலப்படுத்துகிறது

## எய்ம்ஸ்: தலைவிரித்தாடும் தீண்டாமைப் பாகுபாடு

புதுதில்லியில் உள்ள எய்ம்ஸில் (அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம்) சாதி வெறி தலைவிரித்தாடுகிறது என்று நாடாளு மன்றக்குழுவின் விசாரணையில் அம்பல மாகியுள்ளது. இதனால் பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் தொடர்ந்து தங்கள் தேர்வில் தேர்ச்சி பெறாமல் இருந்திருக்கிறார்கள். எஸ்.சி மற்றும் எஸ்.டி, நலனுக்கான நாடாளு மன்றக்குழுவின் தலைவரான பாஜகவைச் சேர்ந்த கிரித் பிரேம்ஜிபாய் சோலங்கி இருக்கிறார். எய்ம்ஸ்சில் இடஒதுக்கீடு பின்பற்றப்படு வது பற்றிய ஆய்வின் முடிவில் இந்தக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆசிரியர்கள் நியமனத்திலும் எஸ்.சி மற்றும் எஸ்.டி. விண்ணப்பதாரர்கள் மீது சாதி ரீதியான பாகுபாடு காட்டப்படுவதாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

“எஸ்.சி மற்றும் எஸ்.டி. மாணவர்களை முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டங்களில் தோல்வியடையச் செய்துள் ளார்கள் என்று எங்களுக்குத் தெரிய வந்திருக்கிறது. இத்தனைக்கும் தீவிரமான முயற்சிகளை அந்த மாணவர்கள் மேற் கொண்டும் பாகுபாடு காரணமாக தோல்வி யடைந்துள்ளனர். எழுத்துத் தேர் வில் நல்ல மதிப்பெண்களைப் பெற்ற பிறகும் செய்முறைத் தேர்வுகளில் தோல்வி அடைந்த தாக அறிவிக்கப்பட்டுள்ளது. எஸ்.சி மற்றும் எஸ்.டி மாணவர்களுக்கு எதிரான போக்கு இருந்ததை இது தெளிவாகக் காட்டுகிறது. அதோடு, தேர்வை நடத்துபவர்கள் மாண வர்களின் பெயர்களைக் கேட்கிறார்கள். இதன் மூலம் அவர்கள் எஸ்.சி அல்லது எஸ்.டி. வகுப்பைச் சேர்ந்தவர்களா என்பதைத் தெரிந்து கொள்கிறர்கள். வருங் காலத்தில் இதுபோன்ற நேர்மையற்ற வேலைகள் நடக்காமல் இருக்கக் கடுமையான நடவடிக்கைகளை சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

பெயர்களைக் குறிப்பிடாமல் ஒரு அடை யாள எண்ணை வைத்துத் தேர்வுகள் நடத்தப்பட வேண்டும். இந்த வேலைகளைக் கண்காணிப்பதற்கான ஏற்பாடு இருத்தல் அவசியமாகும். எஸ்.சி மற்றும் எஸ்.டி. மாணவர்கள் தேர்வு எழுதினால் அது குறித்த ஒரு அறிக்கையை குறிப்பிட்ட வரம்புக் காலத்திற்குள் எய்ம்ஸ் தேர்வுகளுக்கான முதல்வர் வழங்க வேண்டும்” என்று நாடாளு மன்றக் குழு தனது அறிக்கையில் கூறியுள்ளது. எய்ம்ஸில் நடந்து வரும் சாதிரீதியான அவலங்களை ஆவணப்படுத்தி வரும் குரீந்தர் ஆசாத், “நிறுவனத் தீண்டாமை” என்று இந்தக் கொடுமைகளை அழைக்கிறார். தவறு செய்த பேராசிரியர்கள் மற்றும் தேர்வுக் குழுவினர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் படுகிறது என் பதுதான் அடிப்படையான கேள்வியாகும். இத்தகைய பாகுபாடுகள் இனிமேல் நடக்கா மல் இருப்பதற்கு என்ன பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன? இதற்கு முன்பும் எய்ம்ஸில் நடக்கும் சாதி வெறிப் பாகுபாடு களுக்கு எதிராக ஒரு குழு ஆய்வு செய்தது. சுக தியோ தோரத் தலைமையிலான அந்தக்குழு, பல்வேறு தீண்டாமைக் கொடுமைகளைப் பட்டி யலிட்டது. சம வாய்ப்பு அலுவலகம் அமைக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது.

**ஆசிரியர் பணியிடங்கள் :** எய்ம்ஸில் மொத்தம் 1,111 ஆசிரியர் பணியிடங்கள் உள்ளன. இதில் 92 பேராசிரியர்கள் மற்றும் 275 துணைப் பேராசிரியர்களுக்கான பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. ஏன் நிரப்பப்படவில்லை என்ற கேள்விக்கு, பொருத் தமான நபர் கிடைக்கவில்லை என்று கிளிப் பிள்ளை சொல்வது போன்று அரசு தொடர்ந்து சொல்லிக் கொண் டிருக்கிறது. நிரப்ப வேண்டிய பணியிடங் களில் எஸ்.சி மற்றும் எஸ்.சி. பணியிடங்கள் எவ்வளவு என்று சொல்ல மறுக்கிறார்கள். எஸ்.சி மற்றும் எஸ்.டி. பணியிடங்களை நிரப்புவதற்குத் தனியாக தேர்வுக்குழு அமைக்க வேண்டும் என்று நாடாளு மன்றக்குழு பரிந்துரைத்துள்ளது. அதில் பெரும்பாலான உறுப்பினர்கள் எஸ்.சி மற்றும் எஸ்.டி. வகுப்பினராக இருக்க வேண்டும். காலியாக இருக்கும் அனைத்துப் பணியிடங்களும் மூன்று மாதங்களுக்குள் நிரப்பப்பட வேண்டும். இடஒதுக்கீடுப் பணியிடங்கள் ஆறு மாதத்திற்கு மேலாகக் காலியாக இருக்கக்கூடாது என்றும் குழு கூறியுள்ளது. அதேபோல், சிறப்பு மருத்துவப் படிப்புகளிலும் இடஒதுக்கீடு முறை பின்பற் றப்பட வேண்டும் என்று வலியுறுத்தும் நாடாளுமன்றக்குழு, தற்போது அதில் இடஒதுக்கீடு முறையில் இடங்கள் தரப் படுவதில்லை என்று தெரிவித்துள்ளது.

## மதவெறி அரசியல்: எச்சரிக்கிறார் ரகுராம் ராஜன்

**மதவெறி அரசியலை முன் வைத்து, நாட்டின் பொருளாதாரத் தோல்வியை மறைக்க முயன்றால், இலங்கைக்கு ஏற்பட்டநிலைமை தான் இந்தியாவிற்கும் நடக்கும் என்று ரகுராம் ராஜன் எச்சரித்துள்ளார்.**

சத்தீஸ்கர் மாநிலம், ராய்பூரில், காங்கிரஸின் 5ஆவது அகில இந்திய தொழில் வல்லுநர்கள் மாநாடு 30.7.2002 நடைபெற்றது. இதில் ரிசர்வ் வங்கியின் முன்னாள் கவர்னர் ரகுராம் ராஜன் உட்பட பலரும் கலந்துகொண்டனர். இந்த நிகழ்ச்சியில் ‘இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு தாராளமய ஜனநாயகம் ஏன் தேவை?’ என்ற தலைப்பில் ரகுராம் ராஜன் பேசினார்.

அப்போது, “இந்தியாவில், தாராளமய ஜனநாயகத்துக்கு என்ன நடக்கிறது. உண்மையில் இந்தியாவின் வளர்ச்சிக்கு இது தேவையா? ஆம், எங்களின் எதிர்காலம் நமது தாராளமய ஜனநாயகத்தையும் அதன் நிறுவனங்களையும் வலுப்படுத்துவதில்தான் உள்ளது. உண்மையில் இது நமது வளர்ச்சிக்கு மிக அவசியம். இந்தியாவில் இன்று சில தரப்பினரிடையே, ஜனநாயகம் இந்தியாவைத் தடுத்து நிறுத்துகின்றது என்ற எண்ணம் இருக்கிறது. எனவே இந்தியாவுக்கு வலிமையோடு எதேச்சதிகாரமும்கூட தேவை.

பெரும்பாலான சிறுபான்மையினரை இரண்டாம் தர குடிமக்களாக மாற்றும் எந்தவொரு முயற்சியும் நாட்டை பிளவுபடுத்தும். அதனுடன் நாட்டில் வெறுப்பையும் அது உருவாக்கும். மேலும் இது வெளிநாட்டின் தலையீட்டால் நாட்டை பாதிக்கக்கூடிய ஒன்றாக மாற்றும். ஒரு நாட்டின் அரசியல்வாதிகள் சிறுபான்மையினரைக் குறிவைத்து, வேலை நெருக்கடியைத் திசைதிருப்ப முயலும்போது என்ன நடக்கும் என்பதற்கு இலங்கை ஒரு உதாரணம்.

உலகளாவிய நிதி நெருக்கடி தொடங்கியதிலிருந்து, உண்மையில் ஒரு 10 ஆண்டு காலமாக நம்மால் முடிந்த அளவு நாம் சிறப்பாகச் செயல்படவில்லை. நம் இளைஞர்களுக்குத் தேவையான நல்ல வேலை வாய்ப்புகளை உருவாக்க இயலவில்லை. இந்த மோசமான செயல்திறனின் முக்கிய அளவுகோல்" என்று கூறினார்.

# அரை சதவீதம்கூட வேலை தராத மோடி அரசு

நரேந்திர மோடி தலைமையிலான 8 ஆண்டுகால பாஜக ஆட்சியில், இந்திய இளைஞர்களில் 1 சத விகிதம் பேருக்குக் கூட வேலை வழ ங்கப்படவில்லை என்ற உண்மை வெளிச்சத்திற்கு வந்துள்ளது. ஒன்றிய அரசின் பல்வேறு துறைகளில் பணி வாய்ப்புக்காக 22 கோடியே 05 லட்சம் விண்ணப்பங்கள் வந்த நிலையில், அதில், 7 லட்சத்து 22 ஆயிரம் பேருக்கு மட்டுமே நியமனத்திற்கான பரிந்துரைகள் வழங்கப் பட்டுள்ளன என்று ஒன்றிய பாஜக அமைச்சரே நாடாளுமன்றத்தில் எழுத்துப் பூர்வமாக அளித்த பதிலில் ஒப்புக் கொண்டுள்ளார். ஒன்றிய அரசுத்துறைகளில் கடந்த 8 ஆண்டுகளில் வழங்கப்பட்ட பணி நியமனங்கள் குறித்து, தெலுங்கானா மாநிலத்தைச் சேர்ந்த காங்கிரஸ் எம்.பி. அனுமுலா ரேவந்த் ரெட்டி கேள்வி எழுப்பியிருந்தார்.

**வெறும் 0.33 சதவீதம்**

இதற்கு நாடாளுமன்றத்தில் எழுத்துப் பூர்வமாக பதில் அளித்த ஒன்றியப் பணியாளர், பொதுக் குறைகள் மற்றும் ஓய்வூதிய அமைச்சகத்தின் இணை அமைச்சரும், பிரதமர் அலுவலக இணை அமைச்சருமான ஜிதேந்திர சிங், ‘‘கடந்த எட்டு ஆண்டுகளாக அரசு வேலை களுக்கான ஆர்வம் தடையின்றி தொடர்ந்தது. ஆனால், பெறப்பட்ட விண்ணப்பங்களில் 1 சதவீதத்திற்கும் குறைவான விண்ணப்பங்களே வேலைக்கு தேர்ந்தெடு க்கப்பட்டன. 2014-15 முதல் 2021-22 வரை பெறப்பட்ட 22.05 கோடி விண்ணப்பங்களில், 7.22 லட்சம் அல்லது 0.33 சதவிகிதம் மட்டுமே, ஒன்றிய அரசின் பல்வேறு துறைகளில் பணி நியமனம் செய்ய பரிந்து ரைக்கப்பட்டுள்ளன’’ என்று கூறியுள் ளார்.

**தேர்தல் நடந்த ஆண்டில் மட்டும்...**

அமைச்சரின் எழுத்துப்பூர்வ பதில் மூலம் மேலும் பல விவரங்கள் தெரியவந்துள்ளன. கடந்த 8 ஆண்டுகளில் பணிக்காக தேர்ந் தெடுக்கப்பட்ட 7 லட்சத்து 22 ஆயிரம் என்ற மொத்த எண்ணிக்கையில் 20 சதவிகிதத் திற்கும் அதிக மானவர்கள் 2019-20 நிதி யாண்டில் மட்டுமே நியமனம் பெற்றுள்ளனர். ஏனெனில் அந்த ஆண்டில் தான் மக்களவைத் தேர்தல் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. கொரோனா தொற்றுநோய் முழுவதுமாக பரவுவதற்கு முந்தைய - அந்த 2019-20 நிதியாண்டில் அதிக பட்சமாக 1.47 லட்சம் பேர் நியமனத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். 2019-20 ஆம் ஆண்டைத் தவிர்த்து விட்டுப் பார்த்தால், 2014-15 ஆண்டுக்குப் பிறகு அரசுப் பணி களுக்கு குறைந்த எண்ணிக்கையிலேயே நியமனங்கள் நடைபெற்றுள்ளன. மன்மோகன்சிங் ஆட்சியிலிருந்து வெளி யேறிய - மோடி ஆட்சிப் பொறுப்பை ஏற்ற 2014-15 நிதியாண்டில் 1 லட்சத்து 30 ஆயிரம் விண்ணப்பதாரர்கள் நியமனத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். ஆனால், முழுமையாக மோடி ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தபின் அடுத்தடுத்த ஆண்டுகளில் அந்த எண்ணிக்கை தொடர்ந்து குறையத் துவங்கியுள்ளது.

2015-16 நிதியாண்டில் 1 லட்சத்து 11 ஆயிரம் பேர்; 2016-17-இல் 1 லட்சத்து ஆயிரம் பேர்; 2017-18-இல் 76 ஆயிரத்து 147 பேர்; 2018-19-இல் 38 ஆயிரத்து 100 பேர், 2020-21-இல் 78 ஆயிரத்து 555 பேர், 2021-22-இல் 38 ஆயிரத்து 850 பேர் என்ற எண்ணி க்கையிலேயே பணி நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு கடந்த எட்டு ஆண்டுகளில் ஒட்டு மொத்தமாக 7 லட்சத்து 22 ஆயிரம் பேர் மட்டுமே பணி நியமனத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

8 ஆண்டுகளில் சராசரியாக ஒவ் வொரு ஆண்டும் 2 கோடியே 75 லட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், அதிலிருந்துசராசரியாக 90 ஆயிரத்து 288 விண்ணப்பதாரர்கள் மட்டுமே தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளனர். 8 ஆண்டுகளில் பெறப் பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை யிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்ப தாரர்களின் விகிதம் 0.07 சதவிகிதம் முதல் 0.08 சதவிகிதம் என்ற அளவிற்கே இருந்துள்ளது. 2018-19 ஆம் ஆண்டில், அதிகபட்ச மாக 5 கோடியே 09 லட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், அந்த ஆண்டில் வெறும் 38 ஆயிரத்து 100 பேருக்கு மட்டுமே பணி நியமன பரிந்துரைகள் வழங்கப்பட் டுள்ளன. 2020-21 நிதியாண்டில் 1 கோடியே 80 லட்சம் என குறைந்த அளவிற்கே விண்ணப்பங்கள் வந்துள்ளன. இந்த ஆண்டிலும் மிகக் குறைவாக 38 ஆயிரத்து 850 பேருக்கு மட்டுமே பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**அமைச்சர் பட்டியலிட்ட**
**வேலை வாய்ப்புத் திட்டங்கள்**

இந்த புள்ளிவிவரங்களை வெளியிட்டி ருக்கும் அமைச்சர் ஜிதேந்திர சிங், “வேலை வாய்ப்பு உருவாக்கம் மற்றும் வேலை வாய்ப்பை மேம்படுத்துவது அரசாங்கத்தின் முன்னுரிமையாகும். அதன்படி, நாட்டில் வேலைவாய்ப்பை உருவாக்க இந்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வரு கிறது” என்று அரசின் பல்வேறு திட்டங் களையும் தனது அறிக்கையில் பட்டிய லிட்டுக் கொண்டுள்ளார். பிரதான் மந்திரி முத்ரா யோஜனா (PMMY), ‘‘ஆத்ம நிர்பர் பாரத் ரோஜ்கர் யோஜனா’’ (ABRY) மற்றும் ‘மேக் இன் இந்தியா’, ‘ஸ்டார்ட்-அப் இந்தியா’, ‘டிஜிட்டல் இந்தியா’, ‘ஸ்மார்ட் சிட்டி மிஷன்’, ‘புத்துணர்ச்சி மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் மிஷன்’, ‘பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்’, ‘மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம்’ (MGNREGS), ‘பண்டிட் தீன் தயாள் உபாத்யாயா கிராமின் கௌசல்யா யோஜனா’, ‘தீன் தயாள் அந்தோதயா யோஜனா’, ‘தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்’ போன்றவை வேலை வாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண் டுள்ளன என்றும் ஜிதேந்திர சிங், வழக்கமான பாஜக அரசின் பல்லவியைப் பாடியுள்ளார்.

**18 மாதங்களில் 10 லட்சம் நியமனங்கள்?**

அடுத்த 18 மாதங்களில் 10 லட்சம் பேரை ‘மிஷன்’ திட்டங்களின் கீழ் பணியமர்த்த பிரதமர் மோடி உத்தரவிட்டுள்ளதாக ஜூன் 14-ஆம் தேதி ஒன்றிய அரசு வெளியிட்ட அறிவிப்பையும் ஜிதேந்திர சிங் சுட்டிக் காட்டியுள்ளார். ‘அனைத்துத் துறைகள் மற்றும் அமைச்சகங்களில் மனித வளங்களின் நிலையை ஆய்வு செய்த பின்னரே’ பிரதமர் 10 லட்சம் பேருக்கு வேலை என்ற அறிவிப்பை வெளியிட்டார் என்று ஒன்றிய அரசு அப்போது கூறியது. ஆண்டுக்கு 2 கோடிப் பேருக்கு வேலை வழங்குவேன் என்று தேர்தலின்போது வாக்குறுதி அளித்த பிரதமர் நரேந்திர மோடி, 8 ஆண்டுகளில் இதுவரை வழங்கிய அதிகாரப்பூர்வ வேலைகளின் எண்ணிக்கையே வெறும் 7 லட்சத்து 22 ஆயிரம்தான். இந்நிலை யில், 18 மாதங்களில் 10 லட்சம் பேருக்கு வேலை என்ற மோடியின் புதிய அறிவிப்பு என்னவாகுமோ என்ற கேள்வி, இந்திய இளைஞர்களைத் துரத்துகிறது.

# தொடர் கொலைகள், கலவரங்கள்... மதவெறிக்கு இரையாகிறது கர்நாடகா!

தகவல் தொழில்நுட்பம், பொறியியல், ஆய்வுத்துறைகளில் வேகமாக வளர்ந்து வந்த கர்நாடகம் இப்போது வடமாநிலங்களைப் போல கலவரங்களுக்கு புகழ்பெற்றதாக மாறி வருகிறது. இந்துக்கள் மற்றும் சிறுபான்மை மதத்தினரை பிளவுபடுத்தி, அவர்களிடையே நிலவும் ஒற்றுமையை சீரழித்து அதன்மூலம் இந்தியாவை இந்துநாடாக்க ஆர்.எஸ்.எஸ்., சங் பரிவார் கூட்டங்கள் துடிக்கின்றன. இதில் வடநாட்டில் ஓரளவு வெற்றி கண்டுவிட்ட அவர்கள், இப்போது தென்னிந்தியாவிலும் அதே யுக்தியை கையாள திட்டமிட்டு செயல்பட முயல்கிறார்கள் என்பதைய கர்நாடகத்தின் இன்றைய நிலை காட்டுகிறது.

இஸ்லாமிய மாணவிகள் ஹிஜாப் அணியக்கூடாது என பள்ளிக் குழந்தைகளின் மனதில் மதவெறி நஞ்சை திணித்து, கர்நாடகத்தின் ஒட்டுமொத்த மாணவர் சமூகத்தையும் இந்துக்கள், இஸ்லாமியர்கள் என மத ரீதியாக இந்துத்துவ அமைப்புகள் பிளவுபடுத்தின. சமூக ஒற்றுமையை போதிக்க வேண்டிய கல்விக்கூடங்கள் மதவெறி மோதலுக்கான மைதானங்களாக மாறி கர்நாடகமே கலவரக் காடானது. இஸ்லாமிய மாணவிகள் பள்ளிக்கு செல்ல முடியாமல், தேர்வு எழுத முடியாமல் படிப்பைத் தொடர்வதே சவாலானது.

ஹிஜாப் சர்ச்சைக்குப் பிறகு கர்நாடகாவில் மத ரீதியான மோதல்கள் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்து கோயில்களுக்கு வெளியே இஸ்லாமியர்கள் கடை வைக்க அனுமதிக்கக் கூடாது என பஜ்ரங் தள் போன்ற இந்துத்துவ அமைப்புகள் போராட்டங்களில் ஈடுபட்டன. பல்வேறு இடங்களில் இஸ்லாமியர்கள் வைத்திருந்த சிறு சிறு கடைகள் கூட அகற்றப்பட்டன. புனரமைப்பு பணிக்காக இடிக்கப்பட்ட, மங்களூரு வில் உள்ள மதானி ஜூம்மா மசூதியில் இந்துக் கோயில் இருப்பதாக இந்துத்துவ அமைப்புகள் பரப்புரையில் ஈடுபட்டன. புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள விடாமல் நீதிமன்றத்தில் தடையாணையும் பெற்றனர். ஸ்ரீரங்கபட்டினத்தில் திப்பு சுல்தானால் கட்டப்பட்ட ஜாமியா மசூதியும் இந்துக்கோயிலின் மீது கட்டப்பட்டதாக சர்ச்சையை கிளப்பினர். மசூதிகளை கைப்பற்ற இந்துத்துவ அமைப்பினர் நடத்திய தொடர் போராட்டங்களால் கர்நாடகாவில் அமைதி பறிபோனது.

தொடர்ந்து 6 மாதங்களுக்கு மேலாக நிலவிவரும் அமைதியற்ற போக்குக்கு கடந்த ஒருவாரத்தில் மட்டும் 3 பேர் உயிரை பறி கொடுத்துள்ளனர். மங்களூருவில் இருந்து 80 கிமீ தொலைவில் உள்ள பெல்லாரியில் ஜூலை 21ஆம் தேதி புலம்பெயர் தொழிலாளியாக இருந்த 19 வயது இஸ்லாமிய இளைஞர் மசூத் கொலை செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து ஜூலை 26ஆம் தேதி மசூத் வீட்டில் இருந்து 8 கிமீ தொலைவில் பாரதிய ஜனதா இளைஞரணி நிர்வாகியும், உள்ளூர் தொழிலதிபருமான பிரவீன் நெட்டாரு கொலை செய்யப்பட்டார். இதனால் தட்சிண கர்நாடகா முழுவதும் பதற்றமான சூழல் உருவாகி, கலவரங்களும் வெடித்தன. பிரவீன் நெட்டாரு கொல்லப்பட்ட 48 மணிநேரத்தில் மகமது ஃபசீல் என்ற மற்றொரு இஸ்லாமிய இளைஞர் கொல்லப்பட்டார். இந்துத்துவ அமைப்புகள் தரப்பிலும், இஸ்லாமிய அமைப்புகள் தரப்பிலும் இதுவரை 37 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் பலர் பஜ்ரங் தள் அமைப்பை சேர்ந்தவர்கள்.

இந்துத்துவ அமைப்புகளின் தொடர் வெறியாட்டங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டிய கர்நாடக அரசோ, பாப்புலர் பிரண்ட் ஆஃப் இந்தியா அமைப்பை தடை செய்யக் கோரி ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளதாக கூறப்படுகிறது. இந்துத்துவ மதவெறிக்கு கர்நாடகம் இரையாகி வருகிறது என்பதையே இவை நமக்கு உணர்த்துகின்றன. இந்துத்துவ அமைப்புகளின் வளர்ச்சி சமூக அமைதிக்கு பேராபத்தை விளைவிக்கும் என்பதை கர்நாடகம் வெளிச்சமிட்டு காட்டுகிறது. இன்றைய கர்நாடகத்தின் நிலைமையைப் பார்க்கும் எவரும் அதனைப் புரிந்து கொள்வார்கள்.

# கல்வியில் சிறந்து விளங்குகிறது தமிழ்நாடு: உயர்நீதிமன்றம் பாராட்டு

கொரோனா பேரிடரால் பள்ளி செல்லாமல் இடைநின்ற 6 வயது முதல் 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளை கணக்கெடுத்து, மீண்டும் பள்ளியில் சேர்க்க நடவடிக்கை எடுக்கக் கோரி மதுரையை சேர்ந்த முத்துச்செல்வம் என்பவர் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கு தொடர்ந்தார். தலைமை நீதிபதி முனீஸ்வரநாத் பண்டாரி, நீதிபதி ஆனந்தி அமர்வில் வழக்கு விசாரணைக்கு வந்தபோது, இல்லம் தேடி கல்வித்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக தமிழ்நாடு அரசு பதிலளித்தது. இடைநிற்றல் மிகப் பெரிய பிரச்னையாக இருப்பதாக கூறிய நீதிபதிகள், அரசு இதனை கவனத்தில் கொள்ள வேண்டுமென அறிவுறுத்தினர். மேலும் தமிழ்நாடும், கேரளாவும் கல்வி அறிவில் சிறந்து விளங்குவதாகவும், இது 2 மாநில அரசுகளின் சாதனை என்றும் நீதிபதிகள் பாராட்டினர்.

பள்ளிக்கல்வியில் மட்டுமல்ல உயர்கல்வியிலும் தமிழ்நாடுதான் இந்தியாவின் முதன்மை மாநிலாமாக திகழ்கிறது என்பதை கடந்த சில ஆண்டுகளாக வெளியாகி வரும் சிறந்த கல்லூரிகளுக்கான தேசிய தரவரிசை பட்டியல் வெளிக்காட்டுகிறது. 2 வாரங்களுக்கு முன்பு வெளியான இந்த ஆண்டுக்கான பட்டியலில் ஒட்டுமொத்த தரவரிசையில் முதல் 100 கல்லூரிகளில் 18 கல்லூரிகள் தமிழ்நாட்டை சேர்ந்தவை. பொறியியலில் 16 கல்லூரிகளும், ஆராய்ச்சியில் 10 கல்லூரிகளும், மேலாண்மையில் 11 கல்லூரிகளும், கலை அறிவியலில் 32 கல்லூரிகளும், மருத்துவத்தில் 8 கல்லூரிகளும் தமிழ்நாட்டில் இருந்து தரவரிசையில் இடம் பெற்றுள்ளன.

# முகலாயர்களுக்கு எதிரான இந்துத்துவாவின் பொய் மூட்டைகள்

***இராமராஜ்ஜிய கனவோடு மதவெறியை திணித்துவரும் இந்துத்துவா அமைப்புகள், இந்தியாவின் சிறுபான்மை மதத்தினருக்கு எதிராக, இஸ்லாமியர்களுக்கு எதிராக பரப்பும் அவதூறுகள், நிகழ்த்தும் வன்முறைகள் அளவற்றது. அதில் ஒன்றுதான் முகலாய மன்னர்கள் காலத்தில் இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டு, இந்துக்கள் கொல்லப்பட்டு ரத்த ஆறு ஓடியதைப் போல பரப்பப்படும் அவதூறு. அதற்கு மாறாக, வேதகால ஆட்சியில் பாலாறும், தேனாறும் ஓடியதாகவும், அந்த பண்பாடு, கலாசாரத்தை மீட்டெடுக்க வேண்டுமென்றும் பேசி வருகிறார்கள். இரண்டிலும் உள்ள உண்மை என்பது குறித்து 'ஃபிரன்ட்லைன்' இதழில் சாம்சுல் இஸ்லாம் என்பவர் எழுதிய ஆய்வுக்கட்டுரையின் தமிழாக்கம் இதோ....***

ஆர்.எஸ்.எஸ். பிரமுகரான ததாகதா ராய், உள்நாட்டுப் போர் இல்லாமல் இந்து- முஸ்லிம் பிரச்னை முடிவுக்கு வராது என ட்விட்டரில் பதிவிட்டிருந்தார். இவர் 2015 முதல் 2018 திரிபுரா ஆளுநராகவும், 2018 முதல் 2020 வரை மேகாலயா ஆளுநராகவும் பதவி வகித்தவர். ஆர்.எஸ்.எஸ். தலைவர்களுள் ஒருவரான சியாம பிரசாத் முகர்ஜியின் கருத்தைத்தான் தான் கூறியிருப்பதாகவும் விளக்கமும் கொடுத்தார். 1925ஆம் ஆண்டில் ஆர்.எஸ்.எஸ். இயக்கம் உருவாக்கப்பட்டதில் இருந்தே அந்த இயக்கத்தின் முக்கிய கருப் பொருளாகவும் இது இருந்து வருகிறது. இந்தியா என்றால் அது ராமர் குழந்தைகளின் தேசம், இங்கு பாபரின் குழந்தைகளுக்கு இடம் கிடையாது என்பது மட்டுமல்ல, பாபரின் குழந்தைகள் முறைகேடாய் பிறந்தவர்கள் என்பதும் ஆர்.எஸ்.எஸ்.ஸின் கருத்து.

வரலாற்றில் இஸ்லாமியர்களின் ஆட்சிக் காலங் களில் நிகழ்த்தப்பட்ட இந்துக்களுக்கு எதிரான குற்றங்களுக்காக பழிவாங்க வேண்டுமென்று ஆர்.எஸ்.எஸ் மற்றும் அதன் வழிவந்த இந்துத்துவ இயக்கங்கள் பலவும் கூறிவருகின்றன. ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான இந்திய துணைக் கண்டத்தின் வரலாற்றில் இஸ்லாமியர்களின் ஆட்சிக்காலம் என்பது ஏறத்தாழ 400 முதல் 500 ஆண்டுகள். இந்துத்துவ இயக்கங்களின் பரப்புரைகளின் பின்னால் உள்ள உண்மையை அறிந்துகொள்ள இஸ்லாமியர்கள் ஆட்சிக்காலத்தில் என்ன நடந்தது என்பது முதலில் அறிந்துகொள்ள வேண்டும். இஸ்லாமிய ஆட்சியாளர்கள் உயர் ஜாதி இந்துக்களுடன் நட்புறவும், திருமண உறவும்கூட வைத்திருந்ததாகத்தான் வரலாறுகள் விவரிக்கின்றன. அதற்காக ஏன் இன்றைய இஸ்லாமியர்கள் பழிவாங்கப்பட வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. அதேசமயத்தில் இந்து வரலாறு என்பது மத, சமூக, அரசியல் துன்புறுத்தல்கள் இல்லாததா என்பதையும் ஆராய வேண்டியுள்ளது.

இஸ்லாமிய ஆட்சியாளர்கள் அவர்களின் சாம்ராஜ்யங்களை நடத்த அன்றைக்கு உயர்ஜாதி இந்துக்களும் உதவினர் என்பதை, இப்போது முஸ்லிம்கள் இல்லாத இந்தியாவை உருவாக்குவோம் என முழங்கும் இந்துத்துவ வெறியர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அக்பருக்கு பிறகு வேறு எந்த முகலாய பேரரசரும் இஸ்லாமிய தாய்க்கு பிறக்கவில்லை என்பதில் இருந்தே முகலாயர் களுக்கும் ஜாதி இந்துக்களுக்கும் இடையில் இருந்த இணக்கமான உறவைப் புரிந்து கொள்ள முடிகிறது. பல உயர் ஜாதி இந்துக்கள் 'முஸ்லிம்' ஆட்சியாளர்களுக்கு உண்மையாக சேவை புரிந்தனர். முகலாயப் பேரரசை நிறுவிய பாபர் இந்தியாவைக் கைப்பற்ற சில இந்து மன்னர்களையும்தான் அழைத்துவந்தார், அதில் உயர்ஜாதி இந்துக்களும் இருந்தனர்.

### முகலாய அரசுகளில் இந்து அதிகாரிகள்

இந்திய தேசியவாதத்திற்கு இந்து அடித்தளத்தை வழங்கியவர்களில் மிக முக்கியமானவர் அரபிந்தோ கோஷ். இஸ்லாமிய ஆட்சியாளர்கள் இந்துக்களுக்கு பொறுப்பு, பதவிகளை வழங்கியதாலும் இந்துக்களின் மூளையையும், பலத்தையும் பயன்படுத்திக் கொண்டதாலும் முகலாய ஆட்சி நூற்றாண்டுகளை கடந்தும் நீடித்ததாக அரபிந்தோ கோஷ் கூறுகிறார். 16ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை மேற்கு பஞ்சாப்பை தவிர இந்தியாவின் பிற பகுதிகளில் நிலம் சார்ந்த உயர்ந்த உரிமைகள் அனைத்தும் இந்துக்களிடம் அளிக்கப்பட்டிருந்தன, அவற்றில் பெரும்பாலும் உயர் ஜாதி இந்துக்களான ராஜ புத்திரர்களிடம் இருந்தது என வரலாற்று ஆய்வாளர் தாரா சந்த் கூறுகிறார்.

1556 முதல் 1780 வரை (அக்பர் முதல் ஷா ஆலம் ஆட்சிக் காலம் வரை) முகலாயப் பேரரசில் அங்கம் வகித்த அதிகாரிகளின் விவரங்களை அறிய உதவும் அகராதி 'மாசிர் உல் உம்ரா'. ஷாநவாஸ் கான் மற்றும் அவரது மகன் அப்துல் ஹை ஆகியோரால் 1741 மற்றும் 1747-க்கு இடையில் தொகுக்கப்பட்ட இந்த அகராதி, முகலாயப் பேரரசில் அங்கம் வகித்த உயர்ஜாதி இந்துக்களை பற்றிய உண்மையான விவரங்களை தருகிறது. இன்றைய ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், குஜராத்தின் சில பகுதிகளை உள்ளடக்கிய ராஜ்புத்தனா, உத்தரப் பிரதேசம் மற்றும் மத்தியப்பிரதேசத்தை உள்ளடக்கிய புந்தேல்கண்ட் மற்றும் மகாராஷ்டிராவில் நூற்றுக்கணக்கான ராஜபுத்திரர்கள் முகலாய அரசில் உயர் அதிகாரிகளாக பணியாற்றியுள்ளனர். ராஜபுத்திரர்களை அடுத்து பார்ப்பனர்கள் அதிக அளவில் உயர் அதிகாரிகளாக இருந்துள்ளனர் என்பதற்கான ஆதாரங்கள் 'மாசிர் உல் உம்ரா' அகராதியில் உள்ளன.

> *இந்திய தேசியவாதத்திற்கு இந்து அடித்தளத்தை வழங்கியவர்களில் மிக முக்கியமானவர் அரபிந்தோ கோஷ். இஸ்லாமிய ஆட்சியாளர்கள் இந்துக்களுக்கு பொறுப்பு, பதவிகளை வழங்கியதாலும் இந்துக்களின் மூளையையும், பலத்தையும் பயன்படுத்திக் கொண்டதாலும் முகலாய ஆட்சி நூற்றாண்டுகளை கடந்தும் நீடித்ததாக அரபிந்தோ கோஷ் கூறுகிறார். 16ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை மேற்கு பஞ்சாப்பை தவிர இந்தியாவின் பிற பகுதிகளில் நிலம் சார்ந்த உயர்ந்த உரிமைகள் அனைத்தும் இந்துக்களிடம் அளிக்கப்பட்டிருந்தன,*

அவுரங்கசீப் ஆட்சிக்காலத்தில் இந்தியர்களுக்கு எதிராக கொடுமைகளே நடக்கவில்லை என்பதை யாரும் மறுக்கவும் இல்லை, அது யாருடைய வாதமும் அல்ல. இஸ்லாமியர்களும் சேர்ந்தே அவுரங்கசீப் ஆட்சிக்காலத்தில் கடும் சோதனைகளை எதிர்கொண்டனர். அவுரங்கசீப்பின் தந்தை, சகோதரர்கள், ஷியாக்கள், இஸ்லாத்தை பின்பற்றாத முஸ்லிம்கள், கிழக்கு, மத்திய மற்றும் மேற்கு இந்திய பகுதிகளில் ஆட்சிபுரிந்த இஸ்லாமிய குடும்பங்களும் அவுரங்கசீப் ஆட்சிக்காலத்தில் மிகக் கொடூரமான அடக்குமுறைகளை சந்தித்தனர். துறவி சர்மாத்தை டெல்லியில் உள்ள ஜமா மஸ்ஜித் வளாகத்தில் வைத்து அவுரங்கசீப் தூக்கிலிட்டார். அவரது சர்வாதிகார ஆட்சியில் இந்துக்கள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்களை குறிவைத்து தாக்கியதும் உண்மைதான். இருப்பினும் சமகாலத்தில் இந்து மற்றும் ஜைன மத வழிபாட்டுத் தலங்களை அவர் ஆதரித்திருப்பதற்கான ஆவணங்களும் கிடைக்கின்றன. டெல்லி செங்கோட்டையின் முக்கிய நுழைவாயில்களில் ஒன்றான லஹோரியில் இருந்து கண்ணுக்கு எட்டிய தொலைவில் உள்ள கவுரி சங்கர் கோயில் அதற்கு சிறந்த உதாரணம். இந்த கோயில் ஷாஜகான் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டு, அவுரங்கசீப் ஆட்சிக்காலத்திலும் அப்படியே தொடர்ந்தது. அவுரங்கசீப் செய்த குற்றங்களை இந்துக்களுக்கு எதிரானது என்றும் மற்றும் சுருக்குவது ஒட்டுமொத்த மனிதத்திற்கும் எதிரான குற்றத்தின் மதிப்பைக் குறைத்துக் காட்டும் செயலாகவே உள்ளது.

குஜராத்தில் உள்ள சோம்நாத் கோயில் முகமது கஜினியால் இடிக்கப்பட்டது, சூறையாடப்பட்டது என்பதை எவராலும் மறுக்க இயலாது. ஆனால் இந்த சம்பவம் உள்ளூர் இந்துத் தலைவர்களின் உதவியுடனும், பங்கேற்புடனும் நடந்தது என்பது அதில் புதைந்திருக்கும் மற்றொரு உண்மை. ஆர்.எஸ்.எஸ். அமைப்பிற்கு சித்தாந்தத்தை கொடுத்த கோல்வால்கரே இதனை கூறியிருக்கிறார். ”சோம்நாத் கோயிலில் கொள்ளையடிக்க முகமது கஜினி கைபர் போலன் கணவாயைக் கடந்து பாரதத்தில் கால் வைத்தார். ராஜஸ்தானின் மிகப்பெரிய பாலைவனத்தையும் கடந்து வந்தார். உணவு இல்லாமல், படைக்கு தண்ணீர் இல்லாமல் முகமது கஜினி அழிந்திருக்கக்கூடும். ஆனால், உள்ளூர் தலைவர்களை சவுராஷ்டிராவுக்கு எதிராக திருப்பும் யுக்திகளை முகமது கஜினி கையாண்டார். அற்பத்தனத்தாலும், முட்டாள்தனத்தாலும் உள்ளூர் தலைவர்கள் முகமது கஜினியை நம்பி, அவரோடு கைகோர்த்தனர். சோம்நாத் கோயிலை முகமது கஜினி சூறையாடியபோது, அவரது படையில் முன் நின்றவர்கள் நமது ரத்தத்தின் ரத்தங்கள், சதையின் சதைகள், ஆன்மாவின் ஆன்மாக்களான இந்துக்களே. இந்துக்களின் உதவியுடன்தான் சோம்நாத் கோயில் இழிவுபடுத்தப்பட்டது. இது வரலாற்றின் உண்மை” என ஆர்கனைசர் இதழில் 1950ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் தேதி கோல்வால்கர் கூறியுள்ளார்.

### இந்து மன்னர்கள் புனிதர்களா?

இந்து ஆலயங்களை இஸ்லாமிய மன்னர்கள் மட்டும் இழிவுபடுத்தவில்லை. புகழ்பெற்ற ஜெகன்னாத் கோயில் பழமையான புத்த ஆலயம் என்கிறார் விவேகானந்தர். “கோயிலை மட்டும் அல்ல, அங்கிருந்த புத்த மார்க்கத்தை சேர்ந்தவர்களையும் மீண்டும் இந்துவயப்படுத்தினோம். இதுபோல பல இடங்களில் நாம் செய்ய வேண்டும்” என விவேகானந்தர் கூறியிருக்கிறார். (The Complete Works of Swami Vivekananda நூலின் மூன்றாவது தொகுதியில் பக்கம் எண் 264-இல் அதற்கான ஆதாரம் உள்ளது.)

ஆரிய சமாஜை தோற்றுவித்தவர் தயனாந்த சரஸ்வதி. ஜைனத்தை மறுத்து வேதத்தை பரப்புவதற்காக பத்தாண்டுகளுக்கு மேல் தயானந்த சரஸ்வதி இந்தியா முழுவதும் பயணித்ததாக சத்யார்த் பிரகாஷ் என்பவர் எழுதியுள்ளார். மவுரிய வம்சத்தின் கடைசி பவுத்த மன்னராக அறியப்படுபவர் பிருஹத்ரதா. கி.மு. 184-இல் புஷ்யமித்ர சுங்கன் என்ற பார்ப்பனரால் பிருஹத்ரதா கொலை செய்யப்பட்டு, மவுரிய வம்சத்தின் ஆட்சி வீழ்த்தப்பட்டு, சுங்க ஆட்சி நிறுவப்பட்டது.

**(தொடரும்)**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம்




திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 28.07.2022 வியாழக்கிழமை சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி பகுதியில் உள்ள வனவாசியில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் கொள்கை விளக்கப் பொதுக்கூட்டம் நடை பெற்றது.

முதல் நிகழ்வாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி வனவாசியில் கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

பொதுக் கூட்ட ஆரம்பமாக மேட்டூர் டி.கே.ஆர் இசைக் குழுவினர் ஜாதி ஒழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு பாடல்களைப் பாடினர். அதனைத் தொடர்ந்து காவை இளவரசன் ‘மந்திரமா? தந்திரமா?’ அறிவியல் விளக்க நிகழ்வை மக்கள் மத்தியில் மிக எளிமையாக செய்து காட்டினார்.அது கூடியிருந்த மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றது.

அடுத்து வனவாசி பகுதி நகர செயலாளர் பழ. உமாசங்கர் வரவேற்புரை நிகழ்த்த மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு தலைமை உரை நிகழ்த்தினார்.

திவிக மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ், மாவட்டத் தலைவர் சூரியகுமார், ஒன்றிய அமைப்பாளர் கிருஷ்ணன், நகர அமைப்பாளர் ராஜேந்திரன், நகர பொருளாளர் கதிர்வேல், பன்னீர்செல்வம் ஆகியோர் பொதுக் கூட்டத்திற்கு முன்னிலை வகித்தனர்.

திராவிட முன்னேற்ற கழகத் தலைமைக் கழகப் பேச்சாளர் கோனூர் வைரமணி, சி.பி.ஐ ஒன்றிய செயலாளர் பழ. ஜீவானந்தம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

கோனூர் வைரமணி தனது உரையில் “பெரியார் கொள்கை இன்றும் ஏன் தேவைப்படுகிறது” என்பதைப் பற்றியும், பழ ஜீவானந்தம் “பி.ஜே.பி அரசின் அவல நிலைகளைப் பற்றியும்” விளக்கி உரை நிகழ்த்தினர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி தனது நிறைவுரையில் “பெரியார் இயக்கத்தின் தேவை இன்றும் ஏன் தேவைப்படுகிறது, புராணக் கதைகளை சொல்லி மக்களை எப்படி ஏமாற்றுகிறார்கள், வேத கடவுள்களை இப்போது யாரும் வழிபடுவதில்லை என்றும், சாதி இழிவுகளைப் பற்றியும், கல்வி நிலையில் நாம் இப்போது எப்படி உள்ளோம் என்பது பற்றியும், இடஒதுக்கீட்டின் மூலம் தமிழகத்தில் கல்வி, வேலைவாய்ப்பில் நாம் பெற்ற உரிமைகள் நீதிக் கட்சியின் மூலம் நாம் கிடைக்கப் பெற்றோம் என்பதையும், கிடைத்த உரிமைகளை பாதுகாக்க நாம் போராடும் நிலையில் இருக்கிறோம்” என தனது உரையில் கூறினார்.

நிறைவாக நகரத் தலைவர் ப.செந்தில்குமார் நன்றியுரையுடன் பொதுக்கூட்டம் இரவு 10.00 மணி அளவில் நிறைவடைந்தது.

பொதுக் கூட்டத்தில் சேலம், இளம்பிள்ளை , தாரமங்கலம், குமாரபாளையம், மேச்சேரி, தாரமங்கலம், நங்கவள்ளி, மேட்டூர், மேட்டூர் RS, கொளத்தூர், காவலாண்டியூர் ஆகிய பகுதியில் இருந்து பொறுப்பாளர்களும் தோழர்களும் திரளாக கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் ‘தொடர் அரசியல்’ பயிலரங்கில் கழகத் தலைவர் உரையாற்றினார்



திராவிட இயக்கத் தமிழர் பேரவை, சென்னை - காஞ்சிபுரம் திருவள்ளூர் மாவட்டங்கள் இணைந்து நடத்தும், தொடர் அரசியல் பயிலரங்கம், அம்பத்தூர் தாய்த் தமிழ் தொடக்கப் பள்ளியில் 31.07.2022 அன்று காலை 10:30 மணியளவில் தொடங்கியது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி ‘இந்துத்துவ அரசியலை’ப் பற்றி வகுப்பு எடுத்தார். இறுதியாக தோழர்கள் ஆர்வமுடன் கேள்விகளைக் கேட்டு தெளிவு பெற்றனர்.

# நெய்வேலி என்.எல்.சி. நிறுவனத்தில் வட மாநிலத்தவர் தேர்வு: திரும்பப் பெற தி.மு.க. வலியுறுத்தல்

நெய்வேலி என்.எல்.சி. நிறுவனத்தின் பட்டதாரி பொறியாளர் பணியிடங்களுக்கு தமிழக இளைஞர்களை திட்டமிட்டே தவிர்த்தது கண்டனத்திற்குரிய செயல் என திமுக நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

“நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் நூறு விழுக்காடு பட்டதாரிப் பொறியாளர்கள் இடங்களுக்கும், தமிழக இளைஞர்களைத் திட்டமிட்டே தவிர்த்துவிட்டு, வட இந்திய பொறியாளர்களை மட்டுமே தேர்வு செய்திருப்பது கடும் கண்டனத்திற்குரிய செயலாகும்.

அரை நூற்றாண்டுக்கு முன்னர் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்ட நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்காக, அப்பகுதியின் 30 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தங்களது வாழ்வாதாரமாக விளங்கிய நிலங்களை வழங்கினர். அதன் அடிப்படையில் அப்பகுதி மக்களுக்கு என்.எல்.சி நிறுவனத்தில் கடந்த 2010ஆம் ஆண்டுவரை 80 விழுக்காடு பணி வாய்ப்பு வழங்கப்பட்டு வந்தது. அதுவும் பெருமளவு ஒப்பந்தப் பணியாளர்களாக மட்டுமே தமிழர்களுக்கான வேலை வாய்ப்பை என்.எல்.சி. நிறுவனம் வழங்கி வந்தது. படிப்படியாக அதுவும் குறைக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக் காலத்தில், என்.எல்.சியின் பெருமளவு பங்குகளை தனியாருக்கு விற்பனை செய்யும் முடிவை, முன்னாள் முதல்வரும், எங்கள் தலைவருமான கலைஞர் கடுமையாக எதிர்த்தார். இதன் மூலம், நாட்டின் நவரத்தின நிறுவனங்களில் ஒன்றான என்.எல்.சி. நிறுவனத்தைத் தனியார் நிறுவனமாக்கும் முயற்சி அப்போது தடுத்து நிறுத்தப்பட்டது. என்.எல்.சி நிறுவனம் தனியார் மயமாகி விடக்கூடாது என்பதில் திராவிட முன்னேற்றக் கழகம் அப்போதும், இப்போதும், எப்போதும் உறுதியாக இருக்கிறது.

இந்நிலையில், பட்டதாரிப் பொறியாளர்களுக்கான இடங்களை நிரப்ப, வடமாநிலங்களைச் சேர்ந்த 299 பேரை தேர்வு செய்து, வரும் ஆகஸ்ட் 1ஆம் தேதி சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் உடற்தகுதி தேர்வு நடைபெறும் என என்.எல்.சி நிறுவனம் அறிவித்திருப்பது வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சும் செயலாக உள்ளது.

ஏற்கெனவே, கடந்த 05.05.2022 அன்று, என்.எல்.சி நிறுவனத்திற்கான பட்டதாரி நிர்வாகப் பயிற்சியாளர்கள் தேர்வில், என்.எல்.சி நிறுவன சுரங்கப்பணிகளுக்கு நிலத்தை வழங்கிய உள்ளூர் மக்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என வலியுறுத்தி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதி இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், கேட் நுழைவுத் தேர்வு மூலமாக தேர்ந்தெடுப்பது, அத்தேர்வை எழுதாத தமிழக இளைஞர்களின் வேலைவாய்ப்பைப் பாதிக்கும் செயலாகும் என்பதையும் அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டி இருந்தார்கள்.

குறிப்பிட்ட மாநிலத்திற்கு தன்னியல்பாகக் கிடைக்க வேண்டிய வேலைவாய்ப்பை, ஒன்றிய அரசின் நிறுவனம் திட்டமிட்டே தட்டிப் பறிப்பது கூட்டாட்சி தத்துவத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் செயலாகும்.

எனவே, தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள 299 பட்டதாரிப் பொறியாளர்களுக்கும் ஆகஸ்ட் 1-ம் தேதி நடைபெற இருக்கும் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் உடற்தகுதித் தேர்வை என்.எல்.சி நிர்வாகம் உடனடியாக ரத்து செய்ய வேண்டும். என்.எல்.சி நிறுவனத்தின் நூறு விழுக்காடு பணிவாய்ப்புகளும் தமிழர்களுக்கே வழங்கப்படும் வகையில், பணிநியமனத்திற்கான தேர்வு முறையை மாற்றியமைக்க வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.”

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோவை மாவட்டக் கழக முடிவுகள்

கோவை மாவட்ட திவிக சார்பில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் 10ஆம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி கோவையில் முன்னெடுக்கும் நிகழ்வுகள் குறித்த கலந்துரையாடல் கூட்டம் இணையம் வழியில் (conference call meeting) 29.07.2022 வெள்ளி இரவு 9.30 மணிக்கு நடைபெற்றது. இதில் மாவட்ட, நகரப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இதில் ஒரு மனதாக எடுக்கப்பட்ட முடிவுகள் :

1) கழகத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவை விளக்கும் வடிவமைப்பை உருவாக்கி ஒரு வாரம் முன்பே முகநூல், இன்ஸ்டாகிராம்,டுவிட்டர் பக்கங்களில் பகிர்வது, பரப்புவது.
2) 12.08.2022 வியாழன் அன்று காலை 8.00 மணிக்கு கோவை காந்திபுரம் பெரியார் சிலைக்கு கிருஷ்ணன் தலைமையில் மாலை அணிவித்து கழக உறுதிமொழி எடுப்பது.
3) தொடர்ந்து சவுரிபாளையம் பேருந்து நிறுத்தம் அருகே சிவராஜ் தலைமையில் கழகக் கொடியேற்றி கழக உறுதிமொழி எடுப்பது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 4th August 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN